**"இந்த தேகத்தில் குடியிருக்கையில் (இப்பொழுதிருக்கிற நிலைமைகளில் அதாவது, தன்னைப் பற்றியும், சூழ்நிலைகளை பற்றியும் முற்றிலுமாக திருப்தியுள்ளவர்களாயிருக்கிறோம் என்று உணரும் வரை) கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோம் என்று அறிந்து எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். (நம்பிக்கையாயிருக்கிறோம்)" - 2கொரி 5 : 7.**

"தேவனோடு சஞ்சரித்துக்கொண்டு" நாம் அவருக்கு சமீபத்தில் வசித்துக் கொண்டிருந்தோமானால், இப்பொழுது நாம் அடைந்திருக்கிறவைகள், இப்பொழுதிருக்கிற நிலைமைகள் முதலியவைகளோடு, பூரணமாகாதிருந்தால் உணர்வுள்ளவர்களாய் இருக்கமாட்டோம். ஆனால் "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஒதுக்கி வைத்திருக்கிற" ஒரு மேலான ஒய்வையும் ஒரு மேலான வாசஸ்தலத்தையும் நாடித்தேடுகிற பரதேசிகளைப் போலவும் அன்னியரைப் போலவும் உணர்ந்து ஜீவிப்போம். ஆனால் அப்போஸ்தலன் விவரித்துச் சொல்லுகிற பிரகாரமாக யார் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறார்களோ (வாக் 6) அவர்களுக்கு மாத்திரமே இது உண்மையாயிருக்கிறது. "நாம் நிச்சயமுள்ளவர்களாயிருந்து (தேவனிடத்தில் முழு விசுவாசமுள்ளவர்களாயிருந்து, விசுவாசித்து நடக்க சந்தோஷப்படுகிறோம்) இந்த தேகத்தை விட்டுக்குடிபோகவும் (இப்பொழுது வாசஸ்தலமில்லாதவர்களாகவும் பரதேசிகளாகவும் அந்நியராகவும் இருந்து) கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்." நமது ஐக்கியத்தின் ஆவியில். **- Z '97, 302 (R 2230).**

நம்பிக்கை என்பது விசுவாசத்தின் பூரண நிச்சயம். அது எல்லா ஞானமும், நீதியும், அன்பும், வல்லமையுள்ள யேகோவா தேவனின் வார்த்தையின் மேலும், ஆணையின் மேலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தேவனுடைய ஜனங்களின் சலுகையாயிருக்கிறது. அவருடைய ஏற்பாடும், இதுவரை வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அந்த ஏற்பாடு சம்பந்தமாயுள்ள நம்முடைய அனுபவமும், அவருடைய வார்த்தையும், அவருடைய ஆணையையும் பூரணமாக உறுதிப்படுத்துகின்றன. சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடக்கிறபடியால், நம்முடைய (சுயதேசத்தை) அடைவதற்காக நாம் செய்து கொண்டிருக்கிற நமது யாத்திரையின் எல்லா சூழ்நிலைகளிலும் இந்த நம்பிக்கையை நாம் அனுபவிக்கலாம். இது நமது உள்ளத்தின் ஆவியில் கர்த்தரிடத்தில் குடியிராவர்களாயிருக்கிறோம் என்ற உணர்ச்சியிலிருந்து நம்மை காத்துக் கொள்ளுகிறது.

**- P '36, 64.**

**ஒத்த வாக்கியங்கள் :-** மத் 6:25-34; 10:39; 16:26; 18:1-4,24-38,39; லூக் 8:14; 12:19; 14:17-24; 21:34; யோவா 12:43; 15:19; 1கொரி 7:29-31,15:32; பிலி 3:18,19; கொலோ 3:2; யாக் 4:4; 1பேது 1:14,24; 2:11.

**கோபுர வாசிப்பு : Z '97, 303 (R 2230)**

**வினாக்கள்:** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட்டன ? அவை எதில் முடிந்தன?